<u>மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்</u>

<u>அறிக்கை – 29.1.2013</u>

ஈரோடு மாவட்டம், சூரியம்பாளையம் கிராமம், சித்தோடு அருகில் 13.1.2013 அன்று கோயம்புத்தூரிலிருந்து சேலம் சென்று கொண்டிருந்த அரசுப் பேருந்து எதிரே வந்த வேன் மீது மோதி, ஏற்பட்ட விபத்தில் பேருந்தில் பயணம் செய்த சேலம் மாவட்டம், ஆத்தூர் வட்டம், கருமந்துறை கிராமத்தைச் சேர்ந்த திரு. குழந்தை என்பவரின் மகன் கோவிந்தராஜ், திரு. அண்ணாமலை என்பவரின் மகன் தருமன், தருமபுரி மாவட்டம், அரூர் வட்டம், பறையப்பட்டி கிராமத்தைச் சேர்ந்த திரு. சண்முகம் என்பவரின் மகன் சங்கர் ஆகியோர் சம்பவ இடத்திலேயும், கடலூர் மாவட்டம், பண்ருட்டி வட்டம், காமாட்சிபேட்டை கிராமத்தைச் சேர்ந்த திரு. அய்யனார் என்பவரின் மகன் புண்ணியமூர்த்தி, ஈரோடு மாவட்டம், பவானி வட்டம், தொட்டிப்பாளையத்தைச் சேர்ந்த திரு. ரங்கசாமி என்பவரின் மகன் கண்ணன், மற்றும் மதுரை மாவட்டம், பேரையூர் வட்டம், சின்னக்கட்டளை கிராமத்தைச் சேர்ந்த திரு. சதாசிவம் என்பரின் மகன் வேன் ஓட்டுநர் செந்தில் குமார் ஆகியோர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றியும் உயிரிழந்தனர் என்ற செய்தியையும்;

சென்னை, நந்தனத்தைச் சேர்ந்த திரு. சோலையப்பன் என்பவரின் மகன் கார்த்திகேயன் 15.1.2013 அன்று தேனாம்பேட்டை, அண்ணாசாலை - கே.பி தாஸன் சாலை சந்திப்பு அருகே தனது இரு சக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்த போது மெட்ரோ ரயில் பணிக்கு உபயோகப்படுத்திய கிரேன் வாகனம் மோதியதில் பலத்த காயமடைந்து மருத்தவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி 16.1.2013 அன்று உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

ஈரோடு மாவட்டம், கதிரம்பட்டி கிராமம், வண்ணாங்காட்டுவலசு என்ற இடத்தில் சென்று கொண்டிருந்த இரு சக்கர வாகனம் மீது 17.1.2013 அன்று அரசுப் பேருந்து மோதியதில், இரு சக்கர வாகனத்தில் பயணம் செய்த

திரு. காஜா உசேன் என்பவரின் மகன் ஷர்ஷாத் ஷெரீப் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், சௌந்திரபாண்டியபுரம் கிராமத்தைச் சேர்ந்த திரு. மறவன் என்பவரின் மகன் சித்திரை 19.1.2013 அன்று மின்கம்பத்தில் ஏறி மின்சாரம் பழுது பார்க்கும் பணியை மேற்கொண்டிருந்த போது மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

விருதுநகர் மாவட்டம், சிவகாசி வட்டம், கீழத்திருத்தங்கல் கிராமத்தில் அமைந்துள்ள தனியார் பட்டாசு தொழிற்சாலையில் 22.1.2013 அன்று ஏற்பட்ட வெடி விபத்தில், ஆலமரத்துப்பட்டி கிராமம், இலந்தைகுளத்தைச் சேர்ந்த திரு. நைனார் தேவர் என்பவரின் மகன் செல்வராஜ் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

தருமபுரி மாவட்டம், அரூர் வட்டம், கூத்தாடிப்பட்டி கிராமம் அருகே 25.1.2013 அன்று ஈரோடிலிருந்து திருவண்ணாமலைக்கு சென்று கொண்டிருந்த அரசுப் பேருந்து எதிரே வந்த லாரி மீது மோதியதில், பேருந்து ஓட்டுநர் திரு. பழனிசாமி பலத்த காயமடைந்து மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லும் வழியில் உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

திருநெல்வேலி மாவட்டம், நாங்குநேரியை சேர்ந்த திரு. சுப்பிரமணியன் என்பவரின் மகன் அருள் 23.1.2013 அன்று கன்னியாகுமரி மாவட்டம், விளவங்கோடு வட்டம், நல்லூர் கிராமம் அருகே தனது இரு சக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்த போது, அரசுப் பேருந்து மோதியதில் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

நாகப்பட்டினம் மாவட்டம், கீழ்வேளூர் வட்டம், பிரதாபராமபுரம் கிராமம் பிரதான சாலையில் 27.1.2013 அன்று ராமேஸ்வரத்திலிருந்து – சிதம்பரம் சென்று கொண்டிருந்த அரசுப் பேருந்தும், நாகப்பட்டினத்திலிருந்து – எட்டுக்குடிக்கு சென்று கொண்டிருந்த அரசுப் பேருந்தும் நேருக்கு நேர் மோதிக் கொண்டதில் ராமேஸ்வரத்திலிருந்து சிதம்பரம் சென்று கொண்டிருந்த பேருந்தின் ஓட்டுநர்

பன்னீர்செல்வம் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற செய்தியையும் அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

பல்வேறு விபத்துகளில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த துயர சம்பவங்களில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா ஒரு லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழக முதலமைச்சர்